# அன்னை மைமூனா ரழியல்லாஹு அன்ஹா



சவூதி வஹாபிய அரசாங்கத்தினால் தகர்க்கப்பட்ட பின், தற்போதைய அன்னை மைமூனா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் புனித அடக்கஸ்தலம் - ஸரப், சவூதி அரேபியா

இவர்கள் குறைஷியர். ஹாரித் பின் ஹஸன் என்னும் பிரபல தலைவரின் குமாரியாவார்கள். மஸ்ஊத் பின் அம்ரு என்பவர் இவரின் முதற் கணவர்.

ஏதோ ஒரு காரணத்தால் அவரின் திருமண சம்பந்தம் அற்றுப் போனபின் அபூ ரஹம் பின் அப்துல் உஜ்ஜா என்பவரை மணந்தார்கள். அபூரஹம் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டில் உயிர் துறந்தார். பின்னர் ஹஸ்ரத் மைமூனா (ரலியல்லாஹு அன்ஹா) வை கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களே திருமணம் செய்து கொள்ளவேண்டுமென மக்கள் விரும்பினர். அதற்கிணங்க ஹிஜ்ரி 7 இல் திருமணம் செய்தார்கள். இதுவே கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் இறுதி திருமணமாகும்.

ஹஸ்ரத் மைமூனா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் சுமார் 46 ஹதீஸ்களை உலகத்தார்களுக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள். அநேக சந்தர்ப்பங்களில் மார்க்கத் தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் மிக பயபக்தி உடையவர்களாக இருந்தார்கள்.

இவர்கள் ஹிஜ்ரி 51 ஆம் ஆண்டில் மதீனாவிலிருந்து 10 மைல் தூரத்திலுள்ள, இவர்களின் திருமணம் நடைபெற்ற அதே ஸ்தலமாகிய ஸரப் என்னுமிடத்தில் காலமானார்கள்.




மேலும் பல இஸ்லாமிய பெரியார்களின் சரிதைகளை, எங்கள் இணையத்தளத்தில் வாசியுங்கள்:

www.mailofislam.com